# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.27/2025

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுல்தான் | மதம் | : | இந்து |
| த/பெ | : | முகம்மது மொய்தீன் | ஜாதி | : | -- |
| வயது | : | 76 | கிராமம் | : | திருத்தணி |
| தொழில் | : | கறிக்கடை | வட்டம் | : | திருத்தணி |

**10.04.2026**

**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 25.09.2021ம் தேதியிட்ட தீர்மான பேரேடு அசல் நீதிமன்றத்தில் கொண்டு வந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(தீர்மான நகல் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 16.04.2025ம் தேதியிட்ட தீர்மான பேரேடு அசல் நீதிமன்றத்தில் கொண்டு வந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(தீர்மான நகல் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. பிரதிவாதிகள் வெளியிட்ட துண்டு பிரச்சாரம் தாக்கல் செய்கிறேன். **(துண்டு பிரச்சாரம் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 21.04.2025ம் தேதியிட்டு நான் சென்னையில் உள்ள தமிழ்நாடு வக்பு வாரிய தலைமை செயல் அலுவலர் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் கைநகல் தாக்கல் செய்கிறேன்.

**(கடிதம் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 24.04.2025ம் தேதியிட்டு நான் திருத்தணி காவல் ஆய்வாளருக்கு கொடுத்த புகார் கைநகல் தாக்கல் செய்கிறேன். **(புகார் வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)